செய்தி ஐந்து

## மணவாட்டியின் நீதி

வேத வாசிப்பு: வெளி. 19:7-9; மத். 5:20; 6:33; 22:2; 2 கொரி. 5:21; 1 யோவா. 1:7,9; வெளி. 15:3

**I. தேவனுடைய நீதி என்பது, நியாயத்தையும் நீதியையும் பொறுத்தவரை தேவன் தம் செயல்களில் என்னவாக இருக்கிறாரோ அதுவே—வெளி. 15:3; ரோ. 1:16-17; யோவா. 3:16; 1 யோவா. 1:9:**

A. கிறிஸ்துவை அனுபவிக்கும் நம் அனுபவம், தேவனுடைய நீதி என்ற அஸ்திபாரத்தின்மீது இருக்கிறது.

B. அஸ்திபாரம் என்பது, தேவனுடைய சிங்காசனத்தின் அசைக்கமுடியாத அஸ்திபாரமாகிய தேவனுடைய நீதியே—சங். 89:14.

**II. நீதியின் வரையறையில் நான்கு அம்சங்கள் இருக்கின்றன:**

A. நீதி என்பது, தேவனுடைய நீதியான, கடுமையான கோரிக்கைகளின்படி, அவருக்கு முன்பாக நபர்களுடனும் காரியங்களுடனும் விஷயங்களுடனும் சரியாக இருப்பதாகும்—மத். 5:20.

B. நீதி என்பது, ஆவியானவராக நம்மில் வாழ்கிறவராகிய கிறிஸ்துவின் புறம்பான வெளியாக்கம்—2 கொரி. 3:8-9:

1. இதுவே, தேவனுடைய சாயலாகிய நீதி—எபே. 4:23; கொலோ. 3:10.
2. நீதியின் ஊழியம் என்பது கர்த்தருடைய சாயலின் ஊழியமாகும்—2 கொரி. 3:9.

C. நீதி என்பது, தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய ஒரு காரியம்—மத். 6:33; சங். 89:14:

1. தேவனுடைய இராஜ்ஜியம் நீதியே.
2. நீதி தேவனுடைய அரசாங்கத்தோடும் நிர்வாகத்தோடும் ஆளுகையோடும் தொடர்புடையது.

D. நீதி என்பது, நம் ஆள்தத்துவத்தில் தேவனோடு நாம் சரியாக இருப்பதைப் பற்றிய காரியம்—2 கொரி. 5:21:

1. நம் ஆள்தத்துவத்தில் தேவனோடு சரியாக இருப்பதென்றால், ஒளிபுகக்கூடியதும் படிகத் தெளிவானதுமான உள்ளார்ந்த ஆள்தத்துவத்தை, அதாவது, தேவனுடைய மனதிலும் சித்தத்திலுமுள்ள ஆள்தத்துவத்தைக் கொண்டிருப்பதாகும்.
2. இது நாம் கிறிஸ்துவில் தேவனுடைய நீதியாக இருப்பதைப் பற்றிய ஒரு காரியம்—வ. 21.

**III. நீதி, தேவனுடைய புறம்பான செயல்பாடுகள், வழிகள், செயல்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றோடு தொடர்புடையது—வெளி. 15:3:**

A. தேவன் செய்கிறதெல்லாம் நீதியானதே—ரோ. 1:16-17.

B. தேவன் தம் நியாயத்திலும் நீதியிலும் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ, அது அவருடைய நீதியைக் கட்டியமைக்கிறது.

**IV. தேவன் தம் குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தில் நீதியானவர்—1 யோவா. 1:7, 9:**

A. தேவன் தம் வார்த்தையில் நம்பகமானவர் (வ. 10), தம் குமாரனாகிய இயேசுவின் இரத்தத்தில் நீதியானவர்.

B. அவருடைய வார்த்தை, அவருடைய சுவிசேஷமாகிய சத்திய வார்த்தையாகும் (எபே. 1:13); அது, கிறிஸ்துவின் நிமித்தம் அவர் நம் பாவங்களை நமக்கு மன்னிப்பார் (அப். 10:43) என்று நமக்குக் கூறுகிறது; அவர் நம் பாவங்களை நமக்கு மன்னிக்கும்படி, கிறிஸ்துவின் இரத்தம் அவருடைய நீதியான கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டது (மத். 26:28).

C. நம்மை மன்னிப்பதென்றால், நம் பாவங்களின் குற்றங்களிலிருந்து நம்மை விடுவிப்பதாகும், இப்படியிருக்க நம்மைச் சுத்திகரிப்பதென்றால், நம் அநீதியின் கறையிலிருந்து நம்மைக் கழுவுவதாகும்.

**V. நீதி, தேவனுடைய இராஜ்ஜியத்துடன் தொடர்புடையது—ரோ. 14:17:**

A. சபை வாழ்க்கை தேவனுடைய இராஜ்ஜியமாகும்; தேவனுடைய இராஜ்ஜியம் நீதியாகும்.

B. தேவனுடைய சிங்காசனம், அஸ்திபாரமாக நீதியைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது—சங். 89:14.

C. தேவனுடைய நீதி எங்கு இருக்கிறதோ, அங்கு அவருடைய இராஜ்ஜியமும் இருக்கிறது—ஏசா. 32:1; எபி. 1:8-9.

D. பழைய ஏற்பாட்டில், நீதி என்பது பெரும்பாலும் இராஜ்ஜியத்துடன் ஒத்தப் பொருளுடையதாகும்.

E. நீதி இருக்குமிடத்தில் எல்லாம் நேர்த்தியான விதத்தில் தலைமேற்படுத்தப்படுகிறது; இதுவே இராஜ்ஜியம்.

F. நீதி முதலில் தேவனுடைய சாயலை விளைவிக்கிறது, அதன்பிறகு நீதி, தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறது:
   1. ரோமர் 8இல் நீதியும் தேவனுடைய சாயலும் இருக்கின்றன.
   2. ரோமர் 14இல் நீதியும் தேவனுடைய இராஜ்ஜியமும் இருக்கின்றன.
   3. சாயல், இராஜ்ஜியம் ஆகிய இரண்டும் நீதியை அடிப்படையாகக் கொண்டவை.

G. நீதி, புதிய வானங்களிலும் புதிய பூமியிலும் குடியிருக்கும் (2 பேது. 3:13) என்று சொல்வதற்கு, எல்லாம் ஒழுங்காகவும் தலைமேற்படுத்தப்பட்டும் ஒழுங்குபடுத்தப்பட்டும் இருக்கும் என்று அர்த்தம்:
   1. எல்லாம் ஆளுகைசெய்யப்படும் கட்டுப்படுத்தப்படும் நேர்த்தியான ஆளுகையின் கீழ் இருக்கும், ஏனெனில் தேவனுடைய சிங்காசனம், இராஜ்ஜியம், தெய்வீக நிர்வாகம் அங்கு இருக்கும்.
   2. இதன் விளைவு, சமாதானமும் சந்தோஷமுமாக இருக்கும்.

**VI. வெளிப்பாடு 19:7-8இல், நாம் மணவாட்டியின் நீதியைப் பார்க்கிறோம்:**

A. கிறிஸ்து விசுவாசிகளுக்கு நீதியாக இருப்பதன் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன:
   1. முதல் அம்சம், விசுவாசிகள் தேவனிடமாய் மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள் விசுவாசித்த நேரத்தில், அவர்கள் புறம்சார்ந்தநீதியில் தேவனுக்கு முன்பாக நீதிப்படுத்தப்படுவதற்கான அவர்களுடைய நீதியாக இருப்பதாகும்—ரோ. 3:24-26; அப். 13:39; கலா. 3:24, 27.
   2. இரண்டாவது அம்சம், விசுவாசிகள் அகம்சார்ந்தநீதியில் தேவனால் நீதிப்படுத்தப்படும்படி, அவர்களுக்குக் கொடுக்கப்படும் கிறிஸ்துவிலுள்ள நீதியாகிய தேவனுடைய வெளியரங்கமாக, அவர்களிலிருந்து வாழ்ந்துகாட்டப்படும் விசுவாசிகளின் நீதியாக இருப்பதாகும்—ரோ. 4:25; 1 பேது. 2:24a; யாக். 2:24; மத். 5:20; வெளி. 19:8.
   3. நம் புறம்சார்ந்த நீதியாகக் கிறிஸ்து, நாம் யாரில் தேவனால் நீதிப்படுத்தப்படுகிறோமோ அவரே—ரோ. 3:24,28; 4:25; 5:1, 9, 16, 18.
   4. நம் அகம்சார்ந்த நீதியாகக் கிறிஸ்து, தேவனால் நீதிப்படுத்தப்படக்கூடியதும் எப்போதும் தேவனுக்கு ஏற்புடையதுமான வாழ்க்கையை நமக்காக வாழ, நம்மில் குடியிருக்கிறவராயிருக்கிறார்—மத். 5:6, 20.

B. பரிசுத்தவான்களின் அகம்சார்ந்த நீதியாக அவர்களிலிருந்து வாழ்ந்துகாட்டப்படும் கிறிஸ்து அவர்களுடைய திருமண ஆடையாகிறார்—வெளி. 19:8:
   1. நம் இரட்சிப்புக்காக நாம் பெற்றுக்கொண்ட நீதி, புறம்சார்ந்தது, அது நீதியான தேவனின் கோரிக்கையை சந்திக்க நமக்கத் திறனளிக்கிறது; இப்படியிருக்க ஜெயங்கொள்ளும் பரிசுத்தவான்களின் நீதிகள், அகம்சார்ந்தவை; அவை ஜெயங்கொள்ளும் கிறிஸ்துவின் கோரிக்கையை சந்திக்க அவர்களுக்குத் திறனளிக்கிறது—1 கொரி. 1:30; பிலி. 3:9.
   2. மத்தேயு 22:11-12இலுள்ள திருமண ஆடை, நம் அனுதின வாழ்க்கையில் நம் விஞ்சுகிற நீதியாக நாம் வாழ்ந்துகாட்டுகிறவரும் நம்மூலம் வெளிக்காட்டப்படுகிறவருமான கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது—5:20; வெளி. 3:4-5, 18.

C. கர்த்தருடைய மனைவியாகிய அவருடைய மணவாட்டி, "தன்னை ஆயத்தப்படுத்திவிட்டாள். பிரகாசமும் சுத்தமுமான மெல்லிய சணல்நார் ஆடை அணியும்படி அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது; அந்த மெல்லிய சணல்நார் ஆடை பரிசுத்தவான்களின் நீதிகளாம்"—19:7-8:
   1. வெளிப்பாடு 19:8, தெளிவாக ஆடையை நீதியுடன் இணைத்துக்கூறுகிறது.
   2. வசனம் 8இலுள்ள *நீதிகள்* என்ற வார்த்தை பன்மையில் இருக்கிறது; அது "நீதியான செயல்கள்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம்.
   3. நீதிகள் என்பது, நம் இரட்சிப்புக்காக நாம் பெற்றுக்கொண்டவரான, நம் நீதியாகக் கிறிஸ்துவைக் குறிக்கவில்லை—1 கொரி. 1:30.
   4. மெல்லிய சணல்நார் துணி, நம் ஜெயங்கொள்கிற ஜீவனை, நம் ஜெயங்கொள்கிற வாழ்க்கையைச் சுட்டிக்காட்டுகிறது.
   5. மெல்லிய சணல்நார் துணி, நம் ஆள்தத்துவத்திலிருந்து நாம் வாழ்ந்துகாட்டுகிறவரான கிறிஸ்துவே.

D. "செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் [ஜெயங்கொள்ளும் பரிசுத்தவான்கள்] பாக்கியவான்கள்"—வெளி. 19:9:

1. இங்குள்ள செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்து, மத்தேயு 22:2இலுள்ள திருமண விருந்தாகும்.
2. கிறிஸ்துவின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்படுவதென்றால், ஆசீர்வதிக்கப்படுவதாகும்.
3. செம்மறிக்குட்டியானவரின் கல்யாண இராவிருந்துக்கு அழைக்கப்படப்போகும் ஜெயங்கொள்ளும் பரிசுத்தவான்கள், செம்மறிக்குட்டியானவரின் மணவாட்டியாகவும் இருப்பார்கள்—வெளி. 19:7.